நீர் என் பரிகாரியான கர்த்தர்

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி;
அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.
அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து,
உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,
உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு,
உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும்
முடிசூட்டுகிறார்.[1]

கர்த்தாவே நான் உமக்காக காத்திருக்கிறேன்.
நீர் என்னைப் பெலப்படுத்துகிறதினாலே
கழுகைப் போல உயர எழும்புவேன்.
நான் ஓடினாலும் இளைப்படையேன், நடந்தாலும்
சோர்ந்து போகமாட்டேன்.[2]

மெய்யாகவே அவர் எனது பாடுகளை
ஏற்றுக்கொண்டு எனது துக்கங்களைச் சுமந்தார்;
நாமோ அவர் தேவனால் அடிப்பட்டு, வாதிக்கப்பட்டு,
சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.
என்னுடைய மீறுதல்களினிமித்தம் நீர் காயப்பட்டு,
என்னுடைய அக்கிரமங்களினிமித்தம்
நீர் நொறுக்கப்பட்டீர். எனக்குச் சமாதானத்தை
உண்டுபன்னும் ஆக்கினை உம் மேல் வந்தது,
உம்முடைய தழும்புகளால் நான் குணமாகிறேன்.[3]

நீர் என்னை விசாரிக்கிறபடியால்
என்னுடைய வியாகுலங்களையும்,
பிரச்சனைகளையும் உம் மேல் வைக்கிறேன்.
நீரே என்னை சுகப்படுத்தும் தேவன்.[5]

[1] சங்கீதம் 103:2–4
[2] ஏசாயா 40:31
[3] ஏசாயா 53:4–5
[4] 1 பேதுரு 5:7
[5] யாத்திராகமம் 15:26

சங்கீதம் 103:2–4

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,

ஏசாயா 40:31

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

ஏசாயா 53:4–5

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

1 பேதுரு 5:7

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

யாத்திராகமம் 15:26

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au